மின்பத்தின்பக்கமிருந்தைக்கவின்ப
மொழியாமைகண்டாலுமோங்கருவிநாட
பழியாகாவாறேதலை.

* கூ *

தான்கெடினுந்தக்கார்கேடெண்ணற்கதன்னுடம்பி
னூன்கெடினுமுண்ணார்கைத்துண்ணற்கவான்கவிந்த
வையகமெல்லாம்பெறினுமுரையற்க
பொய்யோடிடைமிடைந்தசொல். * ௰ * ஆஅ௰

பிறர்மனைநயவாமை. (௰௭)

அச்சம்பெரிதாலதற்கின்பஞ்சிற்றளவா

னிச்சதினையுங்காற்கோக்கொலையா னிச்சலுங்
கும்பிக்கேகூர்த்தவினையாற்பிறன்றா
நம்பற்கநாணுடையார்.

* க *

அறம்புகழ்கேண்மைபெருமையிந்நான்கும்
பிறன்றாநச்சுவார்ச்சேராபிறன்றா
நச்சுவார்ச்சேரும்பகைபழிபாவமென்
றச்சத்தொடிந்நாற்பொருள். * உ *

புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சந்
துய்க்குமிடத்தச்சந்தோன்றாமற் காப்பச்ச
மெக்காலுமச்சந்தருமாலெவன்கொலோ
வுட்கான்பிறனில்புகல். * ௩ *

காணிற்குடிப்பழியாங்கையுறிற்கால்குறையு
மாணின்மைசெய்யுங்காலச்சமாநீணிரயத்
துன்பம்பயக்குமாற்றுச்சாரிநீகண்ட
வின்பமெனக்கெனைத்தாற்கூறு.

* ச *

செம்மையொன்றின்றிச்சிறியாரினத்தராய்க்
கொம்மைவரிமுலையாடோண்மரீஇ யும்மை
வலியாற்பிறர்மனைமேற்சென்றாரேயிம்மை
யலியாகியாடியுண்பார்.

* ௫ * (௰௮) பிறர்மனைநயவாமை.

பல்லாரறியப்பறையறைந்துநாட்கேட்டுக்
கல்யாணஞ்செய்துகடிப்புக்கமெல்லியற்
காதன்மனையாளுமில்லாளாவென்னொருவ
னேதின்மனையாளைநோக்கு. * ௬ *

அம்பலயலெடுப்பவஞ்சித்தமர்பரீஇ
வம்பலன்பெண்மரீஇமைந்துற்றுநம்பு
நிலைமையினெஞ்சத்தான்றுப்புரவுபாம்பின்
றலைநக்கியன்னதுடைத்து. * ௭ *

பரவாவெளிப்படாபல்லோர்கட்டங்கா
வுரவோர்கட்காமநோயோஞ் கொடிதே
விரவாருணாணுப்படலஞ்சியாது
முரையாதுள்ளாறிவிடும். * ௮ *

அம்புமழலுமவிர்கதிர்ஞாயிறும்
வெம்பிச்சுடினும்புறஞ்சுடும் வெம்பிக்
கவற்றிமதத்தைச்சுடுதலாற்காம
மவற்றினுமஞ்சப்படும். * ௯ *

ஊருளெழுந்தவுருகெழுசெந்தீக்கு
நீருட்குளித்துமுயலாகுநீருட்
குளிப்பினுங்காமஞ்சுடுமேகுன்றேறி
யொளிப்பினுங்காமஞ்சுடும். * ௰ *

௮௯. ௯௰. ஈ ௰ ௧. (௰௯)

இல்லாவிடத்துமியைந்தவளவினா
லுள்ளவிடம்போற்பெரிதுவந்துமெல்லக்
கொடைபொடுபட்டகுணனுடைமாந்தர்க்
கடையாவாமாண்டைக்கதவு. * ௧ *

முன்னரேசா நாண்முனிதக்கமூப்புள
பின்னரும்பீடழிக்குநோயுளகொன்னே
பரவன்மின்பற்றன்மின்பாத்துண்மின்யாதுங்
கரவன்மின்கைத்துண்டாம்போழ்து. * உ *

நடுக்குற்றுத்தற்சேர்ந்தார்துன்பந்துடையார்
கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டு
மிடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம்
விடுக்கும்வினையுலந்தக்கால். * ௩ *

இம்மியரிசித்துணையானும்வைகலு
நும்மிலியைவகொடுத்துண்மினும்மைக்
கொடாஅதவரென்பர்குண்டுநீர்வையத்,
தடாஅவடுப்பினவர். * ௪ *

மறுமையுமிம்மையுநோக்கியொருவற்
குறுமாறியைவகொடுத்தல்வறுமையா
லீதலிசையாதெனினுமிரவாமை,
யீதலிரட்டியுறும், * ௫ *

நடுவூருள்வேதிகைச்சுற்றுக்கோட்புகக,
படுபனையன்னர்பலர்நச்சவாழ்வார்
குடிகொழுத்தக்கண்ணுங்கொடுத்துண்ணாமாக்க,
ளிடிகாட்டுளேற்றுப்பனை. * ௬ *

பெயற்பான்மழைபெய்யாக்கண்ணுமுலகஞ்
செயற்பாலசெய்யாவிடினுங்கயப்புலால்
புன்னைகடியும்பொருகடற்றண்சேர்ப்ப
வென்னையுலகுய்யுமாறு. * ௭ *

எற்றகைமாற்றாழையென்னானுந்தாம்வனையா
தாற்றாதார்க்கீவதாமாண்கடனாற்றின்,
மலிகடற்றண்சேர்ப்பமாறீவார்க்கீதல்,
பொலிகடனென்னும்பெயர்த்து. * ௮ *

இறப்பச்சிறிதென்னாதில்லென்னாதென்று
மறப்பயன்யார்மாட்டுஞ்செய்கமுறைப்புதவி
னையம்புகூஉந்தவசிகடிஞைபோற்,
பையநிறைத்துவிடும். * ௯ *

கடிப்பிடுகண்முரசங்காதத்தோர்கேட்ப |
ரீடித்துமுழங்கியதோர்யோசனையோர்கேட்ப |
ரடுக்கியமூவுலகுங்கேட்குமேசான்றோர்
கொடுத்தாரெனப்படுஞ்சொல். * ௰ * ௸ ௱.

பழைவினை. (உக)

பல்லாவுளுய்த்துவிடினுங்குழக்கன்று
வல்லதாந்தாய்நாடிக்கோடலைத்தொல்லைப்
பழைவினையுமன்னதகைத்தேதற்செய்த
கிழவனைநாடிக்கொளற்கு.
* க *

உருவுமிளைமையுமொண்பொருளுமுட்கு
மொருவழிநில்லாமைகண்டுமொருவழி
யொன்றேயுமில்லாதான்வாழ்க்கையுடம்பிட்டு
நின்றுவீழ்ந்தக்கதுடைத்து. * உ *

வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை
யளந்தனபோகமவரவராற்றான்
விளங்காய்திரட்டினாரில்லைக்களங்கனியைக்
காரெனச்செய்தாருமில்.

* ௩ *

உறற்பாலநீக்கலுறுவர்க்குமாகா
பெறற்பாலனையவுமன்னவாமாரி
வறப்பிற்றருவாருமில்லையதனைச்
சிறப்பிற்றணிப்பாருமில்.

* ௪ *

தினைத்துணையாகித்தந்தேசுள்ளடக்கிப்
பனைத்துணையார்வைகலும்பாடழிந்துவாழ்வர்
நினைப்பக்கிடந்ததெவனுண்டாமேலை
வினைப்பயனல்லாற்பிற,

* ௫ * (௨௨) பழைவினை.

பல்லான்றகேள்விப்பய னுணர்வார்வீயவுங்
கல்லாதார்வாழ்வதறிதிதோற்கல்லாதார்
சீசதநமென்னுமச்சேறகத்தின்மையாற்
கோதென்றுகொள்ளாதாங்கூற்று.

* கூ *

இடும்பைகூர்நெஞ்சத்தாசெல்லாரூங்காண
நெடுங்கடைநின்றுழல்வதெல்லாமடம்பட்டூ
வன்னங்கிழிக்குமகடற்றண்சேர்ப்ப
மூன்னவினையாய்விடும்

* எ *

அறியாருமல்லாறிவதறிந்தும்
பழியோடுபட்டவைசெய்தல்வளியோடி
நெய்தனறவுயிர்க்குநீள்கடற்றண்சேர்ப்ப
செய்தவினையான்வரும்.

* அ *

ஈண்டுநீர்வையத்துளெல்லாருமெத்தூணையும்
வேண்டார்மற்றீயவிழைபயனல்லவை

வேண்டினும்வேண்டாவிடினுமுறற்பால
தீண்டாவிடுதலரிது

* ௯ *

சிறுகாபெருகாமுறைபிறழ்ந்துவாரா
வுறுகாலத்தூற்றாகாவாமிடத்தேயாகுஞ்
சிறுகாலைப்பட்டபொறியுமதனா
லிறுகாலத்தென்னைபரிவு. * ௰ * ௰௧ ௱௰.

மெய்ம்மை. (௨௯)

இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும்
வசையன்றுவையத்தியற்கைநசையழுங்க
நின்றோடிப்பொய்த்தனிரைதொடீஇசெய்ந்நன்றி
கொன்றாரிற்குற்றமுடைத்து. * ௧ *

தக்காருந் தக்கவாயிலாருந் தந் நீர்மை
யெக்காலுங் குன்றலிராவாசக்காரம்
யாவரோதின்னினுங்கையாதாங்கைக்குகோந்
தேவரோதின்னினும்வேம்பு.

* உ *

காலாடுபோழ்திற்கழிகிளைஞர்வானத்து
மேலாடுமீனிற்பலராவர்மேலா
விடனொருவருற்றக்காலீங்குன்றநாட
தொடர்புடையேமென்பார்சிலர்.

* ஊ *

வடுவிலாவையத்தும்மன்னியமூன்றி
னடுவணதெய்தவிருதலையுமெய்து
நடுவணதெய்தாதானெய்துமுலப்பெய்
தடுவதுபோலுந்துயர்.

* ஏ *

நல்லாவின்கன்றாயினாகும்விலைபெறாஉங்
கல்லாரேயாயினுஞ்செல்வர்வாய்ச்சொற்செல்லும்
புல்லீாப்போழ்தினுழவேபோன்மீதாடிச்
செல்லாவாநல்கூர்ந்தார்சொல்.

* ௫ *

(உச)　　மெய்ம்மை.

இடம்படமெய்ஞ்ஞாநங்கற்பினுமென்று
மடங்காதாரென்றுமடங்கார்தடங்கண்ணா
புப்பொடுநெய்பாறயிர்காயம்பெய்தடினுங்
கைப்பறாபேய்ச்சுரையின்காய்.

* ௬ *

தம்மையிகழ்வாரைத்தாமவரின்முன்னிகழ்க
வென்னையவரோடுபட்டதுபுன்னை
விறற்பூங்கமழ்கானல்வீங்குநீர்ச்சேர்ப்ப
வுறற்பாலயார்க்குமுறும்.

* ௭ *

ஆவேறுருவினவாயினுமாபயந்த
பால்வேறுருவினவல்லவாம்பால்போ
லொருதன்மைத்தாகுமறநெறியாபோ
லுருவுபலகொளலீங்கு.

* அ *

யாஅருலகத்தோர்சொல்லில்லார்தேருங்கால்
யாஅருபாயத்தின்வாழாதார்யாஅ
ரிடையாகவின்னாததெய்தாதார்யாஅர்
கடைபோகச்செல்வமுய்த்தரிர். * ௯ *

தாஞ்செய்வினையல்லாற்றம்மொடுசெல்வதுமற்
றியாங்கணுந்தேரிற்பிறிதில்லையாங்குத்தாம்
போற்றிப்புனைந்தவுடம்பும்பயமின்றே
கூற்றங்கொண்டோடும்பொழுது. * ௰ * ௵ ௱௨௰.

தீவினையச்சம். (௨௫)

—o—

துக்கத்துட்டூங்கித்துறவின்கட்சேர்கலா

மக்கட்பிணத்தசுடுகொடுதொக்க
விலங்கிற்றும்புள்ளிற்றுங்காடேபுலன்கெட்ட
புல்லறிவாளர்வயிறு.

* க *

இரும்பார்க்குங்காலராயேதிலார்க்காளாய்க்
கரும்பார்கழனியுட்சேர்வர்சுரும்பார்க்குங்
காட்டுளாய்வாழுஞ்சிவலுங்குறும்பூழுங்
கூட்டுளாய்க்கொண்டுவைப்பார்.

* உ *

அக்கேபோலங்கையொழியவிரவழுகித்
துக்கத்தொழுநோயெழுபவேயக்கா
லலவனைக்காதலித்துக்கான்முரித்துத்தின்ற
பழைவினைவந்தடைந்தக்கால்.

* ௩ *

நெருப்பழற்சேர்ந்தக்கானெய்போல்வதூஉ
மெரிப்பச்சுட்டெவ்வநோயாக்கும்பரப்பக்
கொடுவினையராகுவர்கோடாருங்கோடிக்
கடுவினையராகியார்ச்சார்ந்து. * ௪ *

பெரியவர்கேண்மைபிறைபோலநாளும்
வரிசைவரிசையாநந்தும்வரிசையால்
வானூர்மதியம்போல்வைகலுந்தேயுமே
தானேசிறியார்தொடர்பு.

* ௫ *

(உ௬) தீவினையச்சம்.

சான்றோரெனமதித்துச்சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச்
சான்றாண்மைசார்ந்தார்கணில்லாயிற்சார்ந்தோய்கேள்
சாந்தகத்துண்டென்றுசெப்புத்திறந்தொருவன்
பாம்பகத்துக்கண்டதுடைத்து.

* ௬ *

யாஅரொருவரொருவர்தம்முள்ளத்தைத்
தேருந்துணைமையுடையவர்சாரற்
கநமணிநின்றிமைக்குநாடகேண்மக்கண்
மநம்வேறுசெய்கையும்வேறு.

* ௭ *

உள்ளத்தானள்ளாதுறுதித்தொழிலராய்க்
கள்ளத்தானட்டார்கழிகேண்மைதெள்ளிப்
புனற்செதும்புநின்றலைக்கும்பூங்குன்றநாட
மநத்துக்கண்மாசாய்விடும்

* ௮ *

ஒக்கியவொள்வாடன்னொன்னார்கைப்பட்டக்கா
லூக்கமழிப்பதூஉமெய்யாகுமாக்க
மிருமையுஞ்சென்றுசுடுதலானல்ல
கருமமேகல்லார்கட்டீர்வு.

* ௯ *

மனைப்பாசங்கைவிடாய்மக்கட்கென்றேங்கி
யெனைத்தூழிவாழ்தியோநெஞ்சேயெனைத்துஞ்
சிறுவரையேயாயினுஞ்செய்தநன்றல்லா
லுறுபயனோவில்லையுயிர்க்கு * ௰ * ௵ ௩௰.

அறத்துப்பான்முற்றிற்றுமுற்றும.

பொருட்பால்கல்வி. (௨௭)

குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகு
மஞ்சளழகுமழகல்லநெஞ்சத்து
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையாற்
கல்வியழகேயழகு. * ௧ *

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றாற்
றம்மைவிளக்குமாற்றாமுளராக்கேடின்றா
லெம்மையுலகத்தும்யாங்காணேங்கல்விபோன்
மம்மாறுக்குமருந்து. * ௨ *

கனர்நிலத்துப்பிறந்தவுட்பினைச்சான்றோர்
வினைநிலத்துநெல்வின்விழுகிதாக்கொள்வர்
கடைநிலத்தோராயினுங்கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்துவைக்கப்படும்.

* ரு *

வைப்புழிக்கோட்படாவாய்த்தீயிற்கேடில்லை
மிக்கசிறப்பினாசர்செறின்வவ்வா
சொச்சமெனவொருவன்மக்கட்குச்செய்வன்
விச்சைமற்றல்லபிற.

* சு *

கல்விகணாயிலகற்படவர்தாள்சில
மெல்லநினைக்கிற்பிணிபலதெள்ளினி
னாய்ந்தமைவுடையகற்படவேதீதொழியப்
பாலுண்குருகிற்றெரிந்து.

* ரு *

தோணியியக்குவான் றொல்லைவருணத்துக்
காணிற்கடைப்பட்டானென்றிகழார்காணா
யவன்றுணையாவாறுபோயற்றே நூல்கற்ற
மகன்றுணையாநல்லகொளல்.

* ௬ *

தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையா
ரிகலிலரெஃகுடையார்தம்முட்குழீஇ
நகலினினிதாயிற்காண்பாமகல்வானத்
தும்பருறைவார்பதி.

* ௭ *

கனைகடற்றண்சேர்ப்பகற்றறிந்தார்கேண்மை
நுனியிற்கரும்புதின்றற்றே நுனிநீக்கித்
தூரிற்றின்றன்னதகைத்தரோபண்பிலா
வீரமிலாளர்தொடர்பு.

* ௮ *

கல்லாரேயாயினுங்கற்றாரைச்சேர்ந்தொழுகி
னல்லறிவுநாளுந்தலைப்படுவர்தொல்சிறப்பி
னொண்ணிறப்பாதிரிப்பூச்சேர்தலாற்புத்தோடு
தண்ணீர்க்குத்தான்பயந்தாங்கு. * ௯ *

அலகுசால்கற்பினறிவுநூல்கல்லா
துவகநூலோதுவதெல்லாங்கலகல
கூஉந்துணையல்லாற்கொணடுதடுமாற்றம்
போஒந்துணையறிவாரில். * ௰ *

௮௨ ௱௪௰. குடிப்பிறப்பு. (௨௯)

உடுக்கையுலறியுடம்பழிந்தக்கண்ணுங்
குடிப்பிறப்பாளர்தங்கொள்கையிற்குன்றா
ரிடுக்கண்டலைவந்தக்கண்ணுமரிமா
கொடிப்புற்கறிக்குமோமற்று. * ௧ *

சான்றாண்மைசாயலொழுக்கமிவைமூன்றும்
வான்றோய்குடிப்பிறந்தார்க்கல்லதுவான்றோய
மைதவழ்வெற்பட்டாஅபெறுஞ்செல்வ
மெய்தியக்கண்ணுடம்பிறர்க்கு. * உ *

இருக்கையெழுமெதிர்செலவுமேனை
விடுப்பவொழிதலோடின்னகுடிப்பிறந்தார்
குன்றுவொழுக்கமாக்கொண்டார்கூவதோ
டொன்றுவுணாத்பாற்றன்று. * ஊ *

நல்லவைசெய்யினியல்பாகுந்தீயவை
பல்லவர்தூற்றும்பழியாகுமெல்லா
மூணருங்குடிப்பிறப்பினாகியமென்றோ
புணருமொருவர்க்கெனின். * எ *

கல்லாமையச்சங்கயவர்தொழிலச்சஞ்
சொல்லாமையுள்ளுமோர்சோர்வச்சமெல்லா
மிடப்பார்க்கொன்றீயாமையச்சமாத்தாரிம்
மாணாக்குடிப்பிறந்தார். * ஏ *

இனநன்மையின்சொலொன்றீதன்மற்றேனை
மநநன்மையென்றிவையெல்லாங்கநமணி
மூதனோடிமைக்குமுழங்குவரித்தண்சேர்ப்ப
விற்பிறந்தார்கண்ணேயுள.

* ௬ *

செய்கையழிந்துசிதன்மணடிற்றாயினும்
பெய்யாவொருசிறைபேரிலுடைத்தாகு
மெவ்வமுழந்தக்கடைத்துங்குடிப்பிறந்தார்
செய்வாசெயற்பாலவை.

* ௭ *

ஒருபுடைபாம்புகொளினுமொருபுடை
யங்கண்மாஞாலம்விளக்குறூஉந்திங்கள்போற்
செல்லாமைசெவ்வனேர்நிற்பினுமொப்புரவிற்
கொல்கார்குடிப்பிறந்தார்.

* ௮ *

செல்லாவிடத்துங்குடிப்பிறந்தார்செய்வன
செல்லிடத்துஞ்செய்யார்சிறியவர்புல்வாய்
பருமம்பொறுப்பினும்பாய்மரிமாபோற்
பொருமுரணாற்றுதலின்று.

* ௯ *

ஏற்றொன்றுமில்லாவிடத்துங்குடிப்பிறந்தா
ரற்றுத்தற்சேர்ந்தார்க்கசைவிடத்தூற்றாவ
ரற்றக்கடைத்துமகல்யாறகழ்ந்தக்காற்
றெற்றெனத்தெண்ணீர்படும். * ௰ * ௮௳ ௱௫௰.

மேன்மக்கள். (௬௧)

அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந்
திங்களுஞ்சான்றோருமொப்பர்மற்றிங்கண்

மறுவாற்றுஞ்சான்றோஃதாற்றார்தெருமந்து
தேய்வரொருமாசுறின்.

* ௧ *

இசையுமெனினுமிசையாதெனினும்
வசைதீரவெண்ணுவர்சான்றோர்விசையி
னரிமாவுளங்கிழித்தவம்பினிற்றீதோ
வரிமாப்பிழைப்பெய்தகோல்.

* ௨ *

நரம்பெழுந்துநல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர்
குரம்பெழுந்துகூற்றங்கொண்டேறாருங்கவறா
வுள்ளமெனுநாரினாற்கட்டியுளவரையாற்
செய்வர்செயற்பாலவை.

* ௩ *

செல்வழிக்கண்ணொருநாட்காணினுஞ்சான்றவர்
தொல்வழிக்கேண்மையிற்றோன்றப்புரிந்தியாப்பர்
நல்வரைநாடசிலநாளடிப்படிற்
கல்வரையுமுண்டாநெறி.

* ௪ *

புல்லாவெழுத்திற்பொருளில்வறுங்கோட்டி
கல்லாவொருவனுரைப்பவுங்கண்ணோடி
நல்லார்வருந்தியுங்கேட்பரோமற்றவன்
பல்லாருணாணல்பரிந்து.

* ௫ *

(௩௨) மேன்மக்கள்.

கடித்துக்கரும்பினைக்கண்டகாநூறி
யிடித்துநீர்கொள்ளினுமின்சுவைத்தேயாகும்
வடுப்படவைதிறந்தக்கண்ணுங்குடிப்பிறந்தார்
கூறார்தம்வாயிற்சிதைந்து.

* ௬ *

கள்ளார்கள்ளுண்ணார்கடிவகடிந்தொரீஇ
யெள்ளிப்பிறரையிகழ்ந்துரையார்தள்ளியும்
வாயிற்பொய்கூறார்வடுவறுகாட்சியார்
சாயிற்பரிவதிலர்.

* ௭ *

பிறர்மறையின்கட்செவிடாய்த்திறனறிந்
தேதிலாரிற்கட்குருடனாய்த்தீய
புறங்கூற்றின்மூகையாய்நிற்பானேல்யாது
மறங்கூறவேண்டாவவற்கு * அ *

பன்னாளுஞ்சென்றக்காற்பண்பிலார்தம்முழை
யென்னானும்வேண்டுபவென்றிகழ்பவென்னானும்
வேண்டினுநன்றுமற்றென்றுவிழுமியோர்
காண்டொறுஞ்செய்வர்சிறப்பு. * கூ *

உடையாரிவரென்றொருதலையாப்பற்றிக்
கடையாயார்பின்சென்றுவாழ்வருடைய
பிலந்தலைப்பட்டதுபோலாதேநல்ல
குலந்தலைப்பட்டவிடத்து. * ய * ஆ ௱௬ய.

பெரியாரைப்பிழையாமை. (௩௩)

பொறுப்பரென்றெண்ணிப்புரைதீர்ந்தார்மாட்டும்

வெறுப்பனசெய்யாமைவேண்டும்வெறுத்தபி
னார்க்குமருவியணிமலைநன்னாட
பேர்க்குதல்யார்க்குமரிது.

* ௧ *

பொன்னேகொடுத்தும்புணர்தற்கரியாரைக்
கொன்னேதலைக்கூடப்பெற்றிருந்துமன்னோ
பயனில்பொழுதாக்கழிப்பரோநல்ல
நயமிலறிவினவர்.

* ௨ *

அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு
மிகைமக்களான்மதிக்கற்பாலநயமுணராக்
கையறியாமாக்களிழிப்புமெடுத்தேத்தும்
வையார்வடித்தநூலார்.

* ௩ *

விரிநிறநாகம்விடருளதேனு
முருமின்கடுஞ்சினஞ்சேணின்றுமுட்கு
மருமையுடையவரண்சேர்ந்துமுய்யார்
பெருமையுடையார்செறின். * ௪ *

ஏம்மையறிந்திலிரெம்போல்வாரில்லென்று
தம்மைத்தாங்கொள்வதுகோளன்றுதம்மை
யரியராநோக்கியறனறியுஞ்சான்றோர்
பெரியராக்கொள்வதுகோள். * ௫ *

(௩௪) பெரியாரைப்பிழையாமை.

நளிகடற்றண்சேர்ப்பநாணிழற்போல
விளியுஞ்சிறியவர்கேண்மைவிளிவின்றி
யல்குநிழற்போலகன்றகன்றோடுமே
தொல்புகழாளர்தொடர்பு.
* ௬ *

மன்னர்திருவுமகளிரொழினலமுந்
துன்னியார் துய்ப்பர்தகல்வேண்டா துன்னிக்
குழைகொண்டுதாழ்ந்தகுளிர்மரமெல்லா
முழைதங்கட்சென்றார்க்கொருங்கு.

* ௭ * தெரியத்தெரியுந்தெரிவிலார்கண்ணும்

பிரியப்பெரும்படர்நோய்செய்யும்பெரிய
வுலவாவிருங்கழிச்சேர்ப்பயார்மாட்டுங்
கலவாமைகோடியுறும்.

* ௮ *

கல்லாதுபோகியநாளும்பெரியவர்கட்
செல்லாதுவைகியவைகலுமொல்வ
கொடாஅதொழிந்தபகலுமுறைப்பிற்
படாஅவாம்பண்புடையார்கண்.

* ௯ *

பெரியார்பெருமைசிறுதகைமையொன்றிற்
குரியாருரிமையடக்கந்தெரியுங்காற்
செல்வமுடையாருஞ்செல்வரோதற்சேர்ந்தா
ரல்லல்களைபவெனின். * ௰ * ௮௳ ௱௭௰.

நல்வினஞ்சேர்தல் (௩௫)

அறியாப்பருவத்தடங்காரொடொன்றி
நெறியல்லசெய்தொழுகியவ்வுநெறியறிந்த
நற்சார்வுசாரக்கெடுமேவெயின்முறுகப்
புற்பனிப்பற்றுவிட்டாங்கு.

* ௧ *

அறிமினறநெறியஞ்சுமின்கூற்றம்
பொறுமின்பிறர்கடுஞ்சொற்போற்றுமின்வஞ்சம்
வெறுமின்வினைதீயார்கேண்மையெஞ்ஞான்றும்
பெறுமின்பெரியார்வாய்ச்சொல். * ௨ *

அடைந்தார்ப்பிரிவுமரும்பிணியுங்கேடு
முடங்குடம்புகொண்டார்க்குறலாற்றொடங்கிப்
பிறப்பின்னாதென்றுணரும்பேரறிவினாரை
யுறப்புணர்கவம்மாவென்னெஞ்சு. * ௩ *

இறப்புநினையுங்காலின்னாதெனினும்
பிறப்பினையாருமுனியார்பிறப்பினுட்
பண்பாற்றுநெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்று
நண்பாற்றிநட்கப்பெறின். * ௪ *

ஊரங்கணநீரூரவுநீர்ச்சேர்ந்தக்காற்
பேரும்பிறிதாகித்தீர்த்தமாமோருங்
குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர்
நலமாட்சிநல்லாளாச்சார்ந்து. * ௫ *

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய
வங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉங்
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர்
குன்றன்னார்கேண்மைகொளின். * ௬ *

பாலோடளாயநீர்பாலாகுமல்லது
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்தேரிற்
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல
பெரியார்பெருமையைச்சார்ந்து.

* ௭ *

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபு
லொல்காவேயாகுமுழவருழுபடைக்கு
மெல்லியரோயாயினுநறசார்வுசார்ந்தார்மேற்
செல்லாவாஞ்செற்றார்சினம். * ௮ *

நிலநலத்தானந்தியநெல்லேபோற்றத்தங்
குலநலத்தாலாகுவர்சான்றோர்கலநலத்தைத்
தீவளிசென்றுசிதைத்தாங்குச்சான்றாண்மை
தீயினஞ்சேரக்கெடும்.

* ௯ *

மநத்தான்மறுவிலரேனுந்தாஞ்சேர்ந்த
வினத்தாலிகழப்படுவர்புனத்து
வெறிகமழ்சந்தநமும்வேங்கையும்வேமே
யெறிபுனந்தீப்பட்டக்கால். * ௰ *

ஆ௨ ௱ ௮௰:

பெருமை.

ஈதலிசையாதிளைமைசேணீங்குதலாற்
காதலவருங்கருத்தல்லர்காதலித்
தாதுநாமென்னுமவாவினைகைவிட்டுப்
போவதேபோலும்பொருள்.

* ங *

இற்சார்வினைமார்ந்தமீங்கணைமந்தெமென்றெண்ணிப்
பொச்சாந்தொழுதுவர்பேதையாரச்சார்வு
நின்றனைபோன்றுநிலையாவெனவுணர்ந்தா
ரொன்றும்பரிவதிலர்.

* உ *

மறுமைக்குவித்தமையின்றிச்செய்து
சிறுமைப்படாதேநீர்வாழ்மினிறைஞ்சாய்
நின்றுழிநின்றேறுநிறம்வேறுங்காணு
மின்றிப்பலவுமுளை.

* ஈ *

உறைப்பருங்காலத்துமூற்றுநீர்க்கேணி
யிறைத்துணினுமூராற்றுமென்பர்கொடைக்கடனுஞ்
சாஅஅயக்கண்ணும்பெரியார்போன்மற்றையா
ராஅஅயக்கண்ணுமரிது.

* ௬ *

உறுபுனறந்துலகூட்டியறுமிடத்துங்
கல்லூற்றுழியூறுமாறேபோற்செல்வம்
பலர்க்காற்றிக்கெட்டுலந்தக்கண்ணுஞ்சிலர்க்காற்றிச்
செய்வர்செயற்பாலவை. * ௭ *

(௩௮) பெருமை.

பெருவரைநாடபெரியார்கட்டீமை

கருநரைமேற்சூடேபோற்றோன்றுங்கருநரையைக்
கொன்றன்னவின்னாசெயினுஞ்சிறியார்மே
லொன்றானுந்தோன்றாகெடும். * ௮ *

இசைந்தசிறுமையியல்பிலாதார்கட்

பசைந்த துணையும்பரிவாமசைந்த
நகையேயும்வேண்டாதநல்லறிவினார்கட்
பகையேயும்பாடுபெறும்.

* ௭ *

மெல்லியநல்லாருண்மேன்மையதுவிறந்
தொன்னாருட்கூறறுட்குமுட்குடைமையெல்லாஞ்
சலவருட்சாலச்சலமேநலவரு
ணன்மைவரம்பாய்விடல்.

* ௮ *

கடுக்கியொருவன்கடுங்குறளைபேசி
மயக்கிவிடினுமநப்பிரிப்பொன்றின்றித்
துளக்கமிலாதவர்தூயமநத்தார்
விளக்கினுளொண்சுடரேபோன்று.

* ௯ *

முறறுத்துந்துத்தினைநாளுமறஞ்செய்து
பிறறுத்துத்துத்துவர்சான்றவரத்துத்து
முக்குறறநீக்கிமுடியுமளவெல்லாந்
துக்கத்துணீக்கிவீடும். * ௰ * ௵ ௱௯௰.

தாளாண்மை (௩௯)

கோளாற்றக்கொள்ளாக்குளத்தின்கீழ்ப்பைங்கூழ்போற்
கேளீவதுண்டுகிளைகளோலுஞ்சுவ
வாளாடுகூத்தியர்கண்போற்றடுமாறுந்

தாளாளர்க்குண்டோதவறு.

* ௧ *

ஆடுகோடாகியதரிடைநின்றதூஉங்
காழ்கொண்டகண்ணேகளிறணைக்குங்கந்தரகும்
வாழ்தலுமன்னதகைத்தேயொருவன்றான்
றாழ்வின்றித்தன்னைச்செயின். * ௨ *

உறுபுலியூனிரையின்றியொருநாட்
சிறுதேரைபற்றியுந்தின்னுமறிவினாற்
காற்றொழிலென்றுகருதற்ககையினான்
மேற்றொழிலுமாங்கேமிகும். * ௩ *

இசையாதெனினுமியற்றியோராற்றா
லசையாதுநிற்பதாமாண்மையிசையுங்காற்
கண்டறிரையலைக்குங்கானலந்தண்சேர்ப்ப
பெண்டிரும்வாழாரோமற்று. * ௪ *

நல்லகுலமென்றுந்தீயகுலமென்றுஞ்
சொல்லளவல்லாற்பொருளில்லைத்தொல்சிறப்பி
னொண்பொருளொன்றோதவங்கல்வியாள்வினை
யென்றிவற்றானாகுங்குலம். * ௫ *

(௪௰) தாளாண்மை

ஆற்றுந்துணையுமறிவினையுள்ளடக்கி

பூக்கமுமையாருணர்வுடையாருக்க
மூறுப்பிறலாராயுமொண்மையுடையார்

குறிப்பின்கீழ்ப்பட்டதுலகு.

* ஈ *

சிதலினப்பட்டவாலமாத்தை

மதலையாய்மற்றதன்வீழுன்றியாங்குக்
குதலைமைதந்தைகட்டோன்றிற்றன்பெற்ற

புதல்வன்மறைப்பக்கெடும்.

* ஏ *

ஈதமாயில்லிருந்தின்றிவிளியிறு

மாதந்தலைவருவசெய்படவோயானை

வரிமுகம்புண்படுக்குமவள்ளுகிர்நான்று
ளரிமாமதுகையவர்.

* அ *

தீங்கரும்பீன்றதிரள்காலுளையலரி
தேங்கமிழ்நாற்றமிழந்தாஅங்கோங்கு
முயர்குடியுட்பிறப்பினென்னும்பெயர்பொறிக்கும்
பேராண்மையில்லாக்கடை. * ௯ *

பெருமுத்தரையர்பெரிதுவந்தீயுங்
கருனைச்சோறார்வர்கயவர்கருனையைப்
பேருமறியார்நனிவிரும்புதனாண்மை
நீருமமிழ்தாய்விடும். * ௰ * ௰௨ உ௱

சுற்றந்தழால். (௪௧)

வயாவும்வருத்தமுமீன்றக்காலொவுங்
கவாஅன்மகற்கண்டுதாய்மறந்தாஅங்
கசாஅத்தானுற்றவருத்தமுசாஅத்தன்
கேளிரைக்காணக்கெடும்.
* ௧ *

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லா
நிழன்மரம்போனேரொப்பத்தாங்கிப்பழுமரம்போற்
பல்லார்பயன்றுய்ப்பத்தான்வருந்திவாழ்வதே
நல்லாண்மகற்குக்கடன்.

* உ *

அடுக்கின்மலைநாடதற்சேர்ந்தவனா
யெடுக்கலமென்னார்பெரியோரடுத்தடுத்து
வன்காய்பலபலகாய்ப்பினுமில்லையே
தன்காய்பொறுக்கலாக்கொம்பு.

* ௩ *

உலகறியத்தீரக்கலப்பினுநில்லா
சிலபகலாஞ்சிற்றினத்தார்கேண்மைநிலைதிரியா
நிற்கும்பெரியோர்நெறியடையநின்றனைத்தா
லொற்கமிலாளர்தொடர்பு.

* ௪ *

இன்னரினையரெமர்பிறரென்னுஞ்சொ
லென்னுமிலராமியல்பினாற்றுன்னித்
தொலைமக்கடுன்பந்தீர்ப்பாரோயார்மாட்டுந்
தலைமக்களாகற்பாலார்.

* ௫ *

பொற்கலத்துப்பெய்தபுலியுகிர்வான்புழுக்க
லக்காரம்பாலோடமரார்கைத்துண்டலி
னுப்பிலிப்புற்கையுயிர்போற்கிளைஞர்மாட்
டெக்கலத்தானுமினிது.

* ௬ *

நாள்வாய்ப்பெறினுந்தன்னள்ளாதாரில்லத்து
வேளாண்மைவெங்கருனைவேம்பாகுங்கேளா
யபராநப்போழ்தினடகிடுவரோனுந்
தமராயார்மாட்டேயினிது.

* ௭ *

முட்டிகைபோலமுனியாதுவைகலுங்
கொட்டியுண்பாரூங்குறடுபோற்கைவிடுவர்
சுட்டுக்கோல்போலவெரியுங்புகுவரோ
நட்டாரெனப்படுவார்.

* ௮ *

நறுமலர்த்தண்கோதாய்நட்டார்க்குநட்டார்
மறுமையுஞ்செய்வதொன்றுண்டோவிறுமளவு
மின்புறுவதின்புற்றெழீஇயவொடு
துன்புறுவதுன்புறாக்கால்.

* ௯ *

விருப்பிலாரில்லத்துவேறிருந்துண்ணும்
வெருக்குக்கண்வெங்கருனைவேம்பாம்விருப்புடைத்
தன்போல்வாரில்லுட்டயங்குநீர்த்தண்புற்கை
யென்போடியைந்தவமிழ்து. * ௰ * ௮௨ உ௱௰.

நட்பாராய்தல். (௪௩

கருத்துணர்ந்துகற்றறிந்தார்கேண்மையெஞ்ஞான்றுங்
குருத்திற்கரும்புதின்றற்றேகுருத்திற்
கெதிர்செலத்தின்றன்னதகைத்தரோவென்று

மதுரமிலாளர்தொடர்பு.

* க *

இற்பிறப்பெண்ணியிடைதரியாவென்பதோர்
நற்பூடைக்கொண்டமையல்லதுபொற்கேழ்
பூணொழுகப்புள்ளிரியும்பூங்குன்றநாட
மறமறியப்பட்டதொன்றன்று.

* உ *

யானேயினையவர்நண்பொரீஇநாயினையார்
கேண்மைகெழீஇக்கொளல்வேண்டும்யானே

யறிந்தறிந்தும்பாகனேயேகொல்லுமெறிந்தவேல்
மெய்யதாவால்குழைக்குநாய்.

* ங *

பலநாளும்பக்கத்தாராயினுநெஞ்சிற்
சிலநாள்நமொட்டாரோடொட்டார்பலநாளு
நீத்தாரெனக்கைவிடலுண்டோதன்னெஞ்சத்
தியாத்தாரோடியாத்ததொடர்பு.

* ஙு *

கோட்டுப்பூப்போலமலர்ந்துபிற்கூம்பாது
வேட்டதேவேட்டதாநட்பாட்சிதோட்ட
யைப்பூப்போன்முன்மலர்ந்துபிற்கூம்புவாரை
நயப்பாருநட்பாருமில்.

* ஞ *

கடையாயார்நட்பிற்கழுகனையசோனை
விடையாயார்தெங்கினனையர்தலையாயா
சொண்ணரும்பெண்ணைபோன்றிட்டரூன்றிட்டதே
தொண்டையுடையார்தொடர்பு. * க *

கழுநீருட்காரடகேனுமொருவன்
விழுமிதாக்கொள்ளினமிந்தாம்விழுமிய
குப்த்துவையார்வெண்சோறையாயினுமேவாதார்
கைத்துண்டல்காஞ்சிரங்காய். * எ *

தாய்க்காற்சிறுவிற்போனன்கனியாயினு
மீக்காற்றுணையுமுதவாதார்தட்டென்னுஞ்
சேய்த்தானுஞ்சென்றுகொளல்வேண்டுஞ்செய்வினைக்கும்
வாய்க்காலனையார்தொடர்பு * அ *

தெளிவிலார்நட்பிற்பகைநன்றுசாதல்

விளியாவருநோயினன்றாலளிய
விகழ்தலிற்கோறலினிதேமற்றில்ல
புகழ்தலின்வைதலேநன்று.

* ௯ *

மரீஇப்பலரோடுபன்னாண்முயங்கிப்
பொரீஇப்பொருட்டக்கார்க்கோடலேவேண்டும்
பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னா
மரீஇப்பின்னைப்பிரிவு. * ௰ * ௰௨ உ௱உ௰.

நட்பிற்பிழைபொறுத்தல். (௪௫

)

நல்லாரெனத்தானனிவிரும்பிக்கொண்டாரை
யல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டு
நெல்லுக்குமியுண்டுநீர்க்குநுரையுண்டு
புல்லிதழ்பூவிற்குமுண்டு.

* க *

செறுத்தோறடைப்பிலுஞ்செம்புனலோடோர்
மறுத்துஞ்சிறைசெய்வர்நீர்நசைவாழ்நர்
வெறுப்பவெறுப்பச்செயினும்பொறுப்பரோ

தாம்வேண்டிக்கொண்டார்தொடர்பு.

* உ *

இறப்பவேதீயசெயினுந்தன்னட்டார்

பொறுத்தறகுவதொன்றன்றோருதிறக்கோங்
குருவவண்டார்க்குமுயர்வரைநாட
வொருவர்பொறையிருவர்நட்பு.

* ங *

மடிதிரைதந்திட்டவான்கதிர்மூத்தங்
கடிவிசைதாவாய்கையகலக்குளஞ்சேர்ப்ப
விடுதற்கரியாரியல்பிலரோவெஞ்சுஞ்
சுடுதற்குமூட்டியதீ.

* ச *

இன்னுசெயினும்விடற்பாலரல்லாரைப்
பொன்னுகட்போற்றிக்கொளல்வேண்டும்பொன்னெடு
நல்விற்சிதைத்ததீநாடொறுநாடித்தம்
வில்வத்திலரக்குதலால்.

(சசு) நட்பிற்பிழைபொறுத்தல்.

இன்னுசெயினும்விடுதற்கரியாரைத்
துன்னுர்துறத்தறகுவதோதுன்னருஞ்சீர்
கின்னுத்துநீள்வரைவெற்பகளைபவோ
கண்குத்திற்றென்றுதங்கை.

இலங்குநீர்த்தண்சேர்ப்பவின்னுசெயினுங்
கலந்துபழிகாணுர்சான்றோர்கலந்தபிற்
நீமையெடுத்துரைக்குந்திண்ணறிவில்லாதார்
தாழுமவரிற்கடை.

எறிலார்செய்ததிறப்படவேதீதெனினு
மேநாதக்கதென்னுண்டாமேநாக்குங்காற்காதல்
கழுமியார்செய்தகறங்கருவிநாட
விழுமிதாநெஞ்சத்துணின்று.

* அ *

தமரென்றுதாங்கொள்ளப்பட்டவர்தம்மைத்
தமரன்மைதாமறிந்தாராயினவரைத்
தமரினுநன்குமறித்துத்தமரன்மை
தம்முளடக்கிக்கொளல்.

* கூ *

குற்றமுமேனைக்குணமுமொருவனை
நட்டபினாடித்திரிவேனேனட்டான்
மறைகாவாவிட்டவன்செல்வுழிச்செல்க
வறைகடல்சூழ்வையநக. * ௰ *

ஆ உ ௱௩௰.

கூடாநட்பு. (சஎ

)

செறிப்பில்பழங்கூரைசேறணையாக
விறைத்துநீரேற்றுங்கிடப்பர்கறைக்குன்றம்
பொங்கருவிதாழும்புனல்வனாநன்னாட
தங்கருமமுற்றுந்துணை.

* க *

சீரியார்கேண்மைசிறந்தசிறப்பிற்றாய்
மாரிபோன்மாண்டபயத்ததாமாரி
வறந்தக்காற்போலுமேவாலருவிநாட
சிறந்தக்காற்சீரிலார்நட்பு.

* உ *

நுண்ணுணர்வினாரொடுகூடிநுகர்வுடைமை
விண்ணுலகேயொக்கும்விழைவிற்றானுண்ணூ
லுணர்விலராகியவூதியமில்லார்ப்
புணர்தனிரயத்துளொன்று.

* ௩ *

பெருகுவதுபோலத்தோன்றிவைத்தீப்போ
லொருபொழுதுஞ்செல்லாதேநந்துமருகெல்லாஞ்
சந்தநநீள்சோலைச்சாரன்மலைநாட
பந்தமிலாளர்தொடர்பு.

* ௪ *

செய்யாதசெய்துநாமென்றலுஞ்செய்வதனைச்
செய்யாதுதாழ்த்துக்கொண்டொட்டலுமெய்யாக
வின்புறூஉம்பெற்றியிகழ்ந்தார்க்குமந்நிலையே
துன்புறூஉம்பெற்றிதரும். * ௫ *

(௪௮) கூடாநட்பு.

ஒருநீர்ப்பிறந்தொருங்குநீண்டக்கடைத்தும்
விரிநீர்க்குவளையையாம்பலொக்கல்லா
பெருநீரார்கேண்மைகொளினுநீரல்லார்
கருமங்கள்வேறுபடும்.

* ௬ *

முற்றற்சிறுமந்திமுற்பட்டதந்தையை
நெற்றுக்கண்டன்னவிரலான்ஞெமிர்த்திட்டுக்
குற்றிப்பதிக்குமலைநாடவின்னாதே
யொற்றுமைகொள்ளாதார்நட்பு.

* ௭ *

முட்டுற்றபோழ்தின்முடுகியென்னாருயிரை
நட்டானொருவன்கைநீட்டேனேனட்டான்
கடிமனைகட்டழித்தான்செல்வுழிச்செல்க
நெடுமொழிவையநக.

* ௮ *

ஆன்படுநெய்பெய்கலனுளதுகளைந்து
வேம்படுநெய்பெய்தனைத்தரோதேம்படு
நல்வரைநாடநயமுணர்வார்நண்பொரீஇப்
புல்லறிவினாரொடுநட்பு.

* ௯ *

உருவிற்கமைந்தான்கணூராரண்மையின்மை
பருகற்கமைந்தபானீரளாயற்றே
தெரிவுடையார்தீயினத்தராகுதனாகம்
விரிபெடையோடாடிவிட்டற்று. * ௰ * ௰௨ ௨௱௪௰.

அறிவுடைமை.

பகைவர்பணிவிடநோக்கித்தகவுடையார்
தாமேயுராணித்தலைச்செல்லார்காணா
யிளைப்பிறையாயக்காற்றிங்களைச்சேரா
தணங்கருந்துப்பினார.

நளிகடற்றண்சேர்ப்பநல்கூர்ந்தமக்கட்
கணிகலமாவதடக்கம்பணிவில்சீர்
மாத்திரையின்றிநடக்குமேல்வாழுமூர்
கோத்திரங்கூறப்படும்.

* உ *

ஏந்நிலத்துவித்திடினுங்காஞ்சிரங்காழ்தெங்காகா
தென்னாட்டவருஞ்சுவர்க்கம்புகுதலாற்
றன்னாற்றானாகுமறுமைவடதிசையுங்
கொன்னாளர்சாலப்பலர். * ௩ *

வேம்பினிலையுட்கனியினும்வாழைதன்
றீஞ்சுவையாதுந்திரியாதாமாங்கே
யினந்தீதெனினுமியல்புடையார்கேண்மை
மநந்தீதாம்பக்கமரிது. * ௪ *

கடல்சார்ந்துமின்னீர்பிறக்குமலைசார்ந்து
முப்பீண்டுவாயிறத்தலாற்றத்த
மினத்தனையரலவரெறிகடற்றண்சேர்ப்ப
மநத்தனையர்மக்களென்பார். * ௫ *

(௫௰) அறிவுடைமை.

பராஅரைப்புன்னைபடுகடற்றண்சேர்ப்ப

வொராஅலுமொட்டலுஞ்செய்படவோநல்ல

மருஉச்செய்தியார்மாட்டுந்தங்குமநத்தார்
விராஅய்ச்செய்யாமைமநன்று.

* கூ *

உணாவுணருமூணர்வுடையாளைப்

புணாப்புணருமாமின்படம்புணரிற்
றெரியத்தெரியுந்தெரிவில்லாதாளைப்
பிரியப்பிரியுமாநோய்.

* ஏ *

நன்னிலைக்கட்டன்னைநிறுப்பானுந்தன்னை
நிலைகலக்கிக்கீழிடுவானுநிலையி னு
மேன்மேலுயர்த்துநிறுப்பானுந்தன்னைத்
தலையாகச்செய்வானுந்தான்.

* அ *

கருமவரிசையாற்கல்லாதார்பின்னும்
பெருமையுடையாருஞ்சேறலருமரபி
னுதமாற்றுமொழிகடற்றண்சேர்ப்ப
பேதைமையன்றதறிவு.

* கூ *

கருமமுமுள்படாப்போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கேசெய்யாவொருநிலையே
முட்டின்றிமூன்றுமுடியுமேலஃதென்ப
பட்டினம்பெற்றகலம். * ௰ * ௮௳ உ௱௫௰.

அறிவின்மை. (௫௧
)

நுண்ணுணர்வின்மைவறுமையஃதுடைமை
பண்ணப்பணைத்தபெருஞ்செல்வமெண்ணுங்காற்
பெண்ணவாயாணிழந்தபேடியணியாளோ
கண்ணவாத்தக்ககவம்.
* ௧ *

பல்லான்றகேள்விப்பயனுணர்வார்பாடழிந்
தல்லலுழப்பதறிதிரேற்றொல்சிறப்பி
னாவின்கிழத்தியுறைதலாற்சேராளே
பூவின்கிழத்திபுலந்து.
* ௨ *

கல்லென்று தந்தைகழறலுதனேயோர்
சொல்லென்று கொள்ளாதிகழ்ந்தவன் மெல்ல
வெழுத்தேதாலபல்லார்முன்னீட்டலினியா
வழுக்கோலக்கொண்டிவிடும்.

* க *

கல்லாதுநீண்டவொருவனுலகத்து

நல்லறிவானரிடைப்புக்குமெல்ல
விருப்பினுநாயிருந்தற்றேயிரா அ
துரைப்பினுநாய்குரைத்தற்று.

* ங *

புல்லாப்புன்கோட்டிப்புலவரிடைப்புக்குக்

கல்லாதசொல்லுங்கடையெலாங்கற்ற
கடாஅயிற்றுஞ்சான்றவர்சொல்லார்பொருண்மேற்
படாஅவிடுபாக்கறிந்து.

* ஙு *

(நிஉ) அறிவின்மை.

கற்றறிந்தநாவிற்சொல்லார்தஞ்சோர்வஞ்சி

மற்றையராவார்பகர்வர்பனையின்மேல்
வ்ற்றியவோலைகலகலக்குமெஞ்ஞான்றும்
பச்சோலைக்கில்லையொலி.

* ௬ *

பன்றிக்கூழ்ப்பத்தரிற்றேமாவடித்தர்ரு
னன்றறியாமாந்தர்க்கறத்தாறுனாக்குங்காற்
குன்றின்மேற்கொட்டுந்தறிபோற்றலைதகாந்து
சென்றிசையாவாகுஞ்செவிக்கு.

* ௭ *

பாலாற்கழீஇப்பலநாளுணக்கினும்
வாலிதாம்பக்கமிருந்தைக்கிருந்தன்று
கோலாற்கடாஅய்க்குறினும்புகலொல்லா
நோலாவுடம்பிற்கறிவு.

* ௮ *

பொழிந்தினிதுநாறினும்பூமிசைதல்செல்லா
திழிந்தவைகாமுறூஉமீப்போலிழிந்தவை
தாங்கலந்தநெஞ்சினார்க்கென்னாகுந்தக்கார்வாய்த்
தேன்கலந்ததேற்றச்சொற்றேர்வு.

* ௯ *

கற்றாருனைக்குங்கசடறுநுண்கேள்வி
பற்றாதுதன்னெஞ்சுதைத்தலான்மற்றுமோர்
தன்போலொருவன்முகநோக்கித்தானுமோர்
புன்கோட்டிகொள்ளுமாங்கீழ். * ௰ * ௵ உ௱௬௰.

நன்றியில்செல்வம். (௫௬)

அருகலதாகிப்பலபழுத்தக்கண்ணும்
பொரிதாள்விளவினைவாவல்குறுகா
பெரிதணியராயினும்பீடிலார்செல்வங்
கருதுங்கடப்பாட்டதன்று. * க *

அள்ளிக்கொள்வன்னகுறுமுகிழ்வாயினுங்
கள்ளிமேற்கைநீட்டார்சூடும்பூவன்மையாற்
செல்வம்பெரிதுடையராயினுங்கீழ்களை
நள்ளாரறிவுடையார். * உ *

மல்குதினையகடற்கோட்டிருப்பினும்
வல்லூற்றுவரில்லிணற்றின்கட்சென்றுண்பர்
செல்வட்பெரிதுடையாயினுஞ்சேட்சென்று
நல்குவார்கட்டேநசை. * ரு *

புனர்கடல்சூழ்வையத்துப்புண்ணியமோவேறே
யுனர்வுதுடையாரிருப்பவுணர்விலா
வட்டுமவழுதுணையும்போல்வாருடன்வாழ்வதோ
பட்டுந்துதித்துமுடித்து. * சு *

நல்லார்நயவரிருப்பநயமிலாக்
கல்லார்க்கொன்றுரியகாரணந்தொல்லை
வினைப்பயனல்லதுவேறெடுங்கண்ணுய்
நினைப்பவருவதொன்றில். * ரு *

(ரு சு) நன்றியில்செல்வம்

நாருத்தகடேபோனன்மலர்மேற்பொற்பாவாய்
நீருய்நிலத்துவிளியமோவேறுய
புன்மக்கள்பக்கம்புகுவாய்நீபொன்போலு
நன்மக்கள்பக்கந்துறந்து. * சு *

நயவார்கணல்குரவுநரணின்றுகொல்லோ
பயவார்கட்செல்வம்பறம்பப்பயின்கொல்
வியவாய்காண்வேற்கண்ணுயிவ்விரண்டுமாங்கே

நயவாதுதிற்குநிலை.

* ஏ *

வலனைவகளல்லாதார்காலாறுசென்று

கலனைவகளுண்டுகழிப்பர்வலனைவகள்
காலாறுஞ்செல்லார்கருணையாற்றுப்பப்படவே
மேலாறுபாயவிருந்து.

* அ *

பொன்னிறச்செந்நெற்பொதியொடுபீள்வாட
மின்னெனிர்வானங்கடலுள்ளுருங்கான்றுகுக்கும்
வெண்மையுடையார்விழுச்செல்வமெய்தியக்கால்
வண்மையுமன்னதகைத்து.

* கூ *

ஓதியுமோதாருணர்விலாரோதாது
மொதியனையாருணர்வுடையார்தூய்தாக
நல்கூர்ந்துஞ்செல்வரிரவாதார்செல்வரு
நல்கூர்ந்தாரீயாரெனின். * ௰ * ௮௨ உ௱௭௰

ஈயாமை. (௫௫)

நட்டார்க்குநள்ளாதவர்க்குமுளவரையா
லட்டதுபாத்துண்டலட்டுண்டலட்ட

தடைத்திருந்துண்டொழுகுமாவதின்மாக்கட்
கடைக்குமாமாண்டைக்கதவு.

* ௧ *

ஏத்துணையானுமியைந்தவளவினாற்
சீற்றறஞ்செய்தார்தலைப்படுவர்மற்றைப்
பெருஞ்செல்வமெய்தியக்காற்பின்னறிதுமென்பா
ாழிந்தார்பழிகடலத்துள். * ௨ *

துய்த்துக்கழியான் றுறவோர்க்கொன்றீகலான்

வைத்துக்கழியுமடவோனைவைத்த
பொருளுமவனைநகுமேயுலகத்
தருளுமவனைநகும்.

* ஈ *

கொடித்தலுந் துய்த்தலுந்தேற்றுவிடுக்குடை
யுள்ளத்தான்பெற்றபெருஞ்செல்வமில்வத்
தருவுடைக்கந்தியனைப்போலப்பருவத்தா
லேதிலான் றுய்க்கப்படும்.

* ஊ *

ன்றிநீர்ப்பெருங்கடலெய்தியிருந்து
மறுநீர்ச்சிறுகினைத்தூறல்பார்த்துண்பர்
மறுமையறியாதாராக்கத்திற்சான்றோர்
கழிநல்குரவேதலை.

* ஏ *

ஏனதெனதென்றிருக்குமேழைபொருளை
பெனதெனதென்றிருப்பன்யானுந்தனதாயிற்
றானுமதனைவழங்கான்பயன்றுவ்வான்
யானுமதனையது.

* ௬ *

விழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தா
ரிழந்தாரெனப்படுதலுய்ந்தாருழந்ததனைக்
காப்புய்ந்தார்கல்லுதலுமுய்ந்தார்தங்கைநோவ
யாப்புய்ந்தாருய்ந்தபல.

* ௭ *

தனதாகத்தான்கொடான்றாயத்தவருந்
தமதாயபோழ்தேகொடாஅர்தனதாக
முன்னேகொடுப்பினவர்கடியார்தான்கடியான்
பின்னையவர்கொடுக்கும்போழ்து.

* ௮ *

இரவலர்கன்றாகவீவாராவாக

விரகிற்சுரப்பதாம்வண்மைவிரகின்றி
வல்லவரூன்றவடியாபோல்வாய்வைத்துக்
கொல்லச்சுரப்பதாங்கீழ்.

* ௯ *

ஈட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளைக்
காத்தலுமாங்கேகடுந்துன்பங்காத்தல்-
குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக்
குறைபதிமற்றைப்பொருள். * ௰ * ௸ உ௱அ௰

இன்மை (

௫௭)

அத்திட்டகூறையரைச்சுற்றிவாழினும்
பத்தெட்டுடைமைபலருள்ளும்பாடெய்து
மொத்தகுடிப்பிறந்தக்கண்ணுமொன்றில்லாதார்
செத்தபிணத்திற்கடை. * ௧ *

நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாருமறிவர் புகை நுட்பந் தேரி
னிரப்பிடும்பையாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து. * உ *

கல்லோங்கு யர்வரை மேற்காந் தண்மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங் கொல்லைக்
கலா அற்கிளி கடியுங் கானகநாட
விலா அ அர்க்கில்லைத் தமர். * ௩ *

உண்டாய போழ்தினுடைந் துழிக்காகம் போற்
றொண்டாயிரவர் தொகுபவே வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோவென்பா
ரொருவருமிவ்வுலகத்தில்.

* ௪ *

பிறந்தகுலமாயும் பேராண்மைமாயுஞ்
சிறந்ததங் கல்வியுமாயுங் கறங்கருவி
கன்மேற்கழூஉங் கணமலை நன்னாட
வின்மை தழுவப்பட்டார்க்கு. * ௫ *

(நஅ) இன்மை.

உள்கூர்பசியாலுழைநசைஇச்சென்றூர்கட்
குள்ளுரீருந்துமொன்றூற்றுதானுள்ளு
ரிருந்துயிர்கொன்னேகழியாதுதான்போய்
விருந்தினனுதலேநன்று.

* க *

நீர்மையேயன்றிநிரம்பவெழுந்ததங்
கூர்மையுமெல்லாமொருங்கிழப்பர்கூர்மையின்
மூல்லையலக்குமெயிற்றுப்நிரப்பென்னு
மல்லலடையுப்பட்டார்.

* எ *

இட்டாற்றுப்பட்டொன்றிநந்தவர்க்காற்றுது
மூட்டாற்றுப்பட்டுமுயன்றுள்ளுர்வாழ்தலி
னெட்டாற்றுச்சென்றுநிணமனையிற்கைந்நீட்டுங்
கெட்டாற்றுவாழ்க்கையேநன்று.

* அ * கடகஞ்செறிந்ததங்கைகளால்வாங்கி

யடகுபறித்துக்கொண்டட்டுக்குடைகலனு
வுப்பிலிவெந்தைதின்றுள்ளற்றுவாழ்பவே
துப்புரவுசென்றுலந்தக்கால்.

* கூ *

ஆர்த்தபொறியவணிகிளர்வண்டினம்
பூத்தொழிகொம்பின்மேற்செல்லாவாநீர்த்தருவி
தாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்னாட
வாழாதார்க்கில்லைத்தமர். * ய * ஆ உ௱கூய.

மாநம். (கூ)

திருமதுகையாகத்திறனிலார்செய்யும்
பெருமிதங்கண்டக்கடைத்துமெரிமண்டிக்

கானந்தலைப்பட்டதீப்போற்கனலுமே

மாநமுடையார்மநம்.

* க *

ஏன்பாயுகினுமியல்பிலார்பின்சென்று
திம்பாடுரைப்பரோதம்முடையார்தம்பா
டுரையாமைமுன்னுணருமொண்மையுடையார்க்
குரையாரோ[illegible]முற்றநோய்.

* உ *

யாமாயினெம்மில்லங்காட்டுதுந்தாமாயிற்
காணவேகந்பழியுமென்பார்போனாணிப்
புறங்கடைவைத்தீவர்சோறுமதனான்
மறந்திடுகசெல்வர்தொடர்பு.

* ௩ *

இம்மையுநன்றாமியனெறியுங்கைவிடா
தும்மையுநல்லபயத்தலாற்செம்மையி
னானங்கடழுங்கதுப்பினாய்நன்றேகாண்
மாநமுடையார்மதிப்பு.

* ௬ *

பாவமுமேனைப்பழியும்படவருவ

சாயினுஞ்சான்றவர்செய்கலார்சாத
லொருநாளொருபொழுதைத்துன்பமவைபோ
லருநவையாற்றுதலின்று.

* ௫ *

(௬௰) மாநம.

மல்லன்மாஞாலத்துவாழ்பவருளெல்லாஞ்
செல்வரெனினுங்கொடாதவர்நல்கூர்ந்தார்

நல்கூர்ந்தக்கண்ணும்பெருமுத்தரையரோ
செல்வரைச்சென்றிரவாதார்.

* ௬ *

கடையெலாங்காய்பசியஞ்சுமற்றேனை

யிடையெலாமின்னாமையஞ்சும்புடைபரந்த
விற்புருவவேனெடுங்கண்ணாய்தலையெல்லாஞ்
சொற்பழியஞ்சிவிடும்.

* ௭ *

நல்லர்பெரிதளியர்நல்கூர்ந்தாரென்றெள்ளிச்
செல்வர்சிறுநோக்குநோக்குங்காற்கொல்ல
னுலையூதுந்தீயேபோலுள்கனலுங்கொல்லோ
தலையாயசான்றோர்மநம்.

* ௮ *

நச்சியார்க்கீயாமைநாணன்றுநாணாளு
மச்சத்தானாணுதனாணன்றாமெச்சத்தின்
மெல்லியராகித்தம்மேலாயார்செய்தது
சொல்லாதிருப்பதுநாண்.

* ௯ *

கடமாதொலைச்சியகானுறைவேங்கை
யிடம்வீழ்ந்ததுண்ணாதிறக்குமிடமுடைய
வானகங்கையுறினும்வேண்டார்விழுமியோர்
மாநமழுங்கவரின். * ௰ * ௵ ௩௱.

இரவச்சம். (௬௧)

நம்மாலேயாவரிந்நல்கூர்ந்தாரெஞ்ஞான்றுந்
தம்மாலாமாக்கமிலரென்றுதம்மை
மருண்டமநத்தார்பின்செல்பவோதாமுந்
தெருண்டவறிவினவர்.

* ௧ *

இழித்தக்கசெய்தொருவனாவுணவிற்
பழித்தக்கசெய்யான்பசித்தறவறோ

விழித்திமைக்குமாத்திரையன்றோவொருவ
னழித்துப்பிறக்கும்பிறப்பு.

* உ *

இல்லாமைகந்தாவிரவு துணிந்தொருவர்
செல்லாருமல்லர்சிறு நெறிபுல்லா
வகம்புகுமினுண்ணுமினென்பவர்மாட்டல்லான்
முகம்புகுதலாற்றுமோமேல்.

* ௩ *

திருத்தன்னைநீப்பினுந்தெய்வஞ்செறினு
முருத்தமநத்தோடுயர்வுள்ளினல்லா
லருத்தஞ்செறிக்குமறிவிலார்பின்சென்
றெருத்திறைஞ்சிநில்லாதாமேல்.

* ௪ *

கரவாததிண்ணன்பிற்கண்ணன்றார்கண்ணு
மிரவாதுவாழ்வதாம்வாழ்க்கைகயிரவினை
யுள்ளுங்காலுள்ளமுருகுமாலென்கொலோ
கொள்ளுங்காற்கொள்வார்குறிப்பு.

* ௫ *

இன்னாவியைகவினியவொழிகென்று
தன்னையேதானிரப்பத்தீர்வதற்கென்னைகொல்
காதல்கவற்றுமநத்தினாற்கண்பாழ்பட்
டேதிலவனாயிரவு.

* ௬ *

ஈன்றும்புதியார்பிறப்பினுமில்வுலகத்
தென்றுமவனேபிறக்கலான்குன்றின்
பரப்பெலாம்பொன்னொழுகும்பாயருவிநாட
விரப்பாரையெள்ளாமகன்.

* ௭ *

புறத்துத்தன்னின்மைநலியவகத்துத்தன்
னன்ஞாநநீக்கிநிறீஇயொருவனை
யீயாயெனக்கென்றிரப்பானேலந்நிலையே

மாயானோமாற்றிவிடின்.

* அ *

ஒருவரொருவரைச்சார்ந்தொழுகலாற்றி
வழிபடுதல்வல்லுதலல்லாற்பரிசழிந்து
செய்யீரோவென்னானுமென்னுஞ்சொற்கின்னாதே
பையத்தான்செல்லுநெறி. * கூ *

பழைமைகந்தாகப்பசைந்தவழியே
கிழமைதான்யாதானுஞ்செய்ககிழமை
பொறாஅவரென்னிற்பொத்தித்தந்நெஞ்சத்
தறாஅச்சுடுவதோர்தீ. * ம * ஆ ௩௱ம.

அவையறிதல். (௬௩

)

மெய்ஞ்ஞாநக்கோட்டியுறழ்வழிவிட்டாங்கோ
ாஞ்ஞாநந்தந்திட்டதுவாங்கறத்துழாய்க்
கைஞ்ஞாநங்கொண்டொழுகுங்காரறிவாளர்முன்
சொன்ஞாநஞ்சோரவிடல். * ௧ *

நாப்பாடஞ்சொல்லிநயமுணர்வார்போற்செறிக்குந்
தீப்புலவற்சேரார்செறிவுடையார்தீப்புலவன்
கோட்டியுட்குன்றக்குடிப்பழிக்குமல்லாக்காற்
றோட்புடைக்கொள்ளாவெழும்.

* ௨ *

சொற்றாற்றுக்கொண்டுசுனைத்தெழுதல்காமுறுவர்
கற்றாற்றல்வன்மையுந்தாந்தேற்றார்கற்ற
செல்வுரைக்குமாறறியார்தோற்பதறியார்
பலவுரைக்குமாந்தர்பலர். * ௩ *

கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தாற்
பெற்றதாம்பேதையோர்சூத்திரமற்றதனை
நல்லாரிடைப்புக்குநாணாதுசொல்லித்தன்
புல்லறிவுகாட்டிவிடும்.

* ௪ *

வென்றிப்பொருட்டால்விலங்கொத்துமெய்கொள்ளார்
கன்றிக்கறுத்தெழுந்துகாய்வாரோடொனறி
யுரைவித்தகமெழுமார்காண்பவேகையுட்
சுரைவித்துப்போலுந்தம்பல். * ௫ *

(௬௪) அவையறிதல்.

பாடமேயோதிப்பயன்றெரிதறேற்றாத
மூடர்முனிதக்கசொல்லுங்காற்கேடருஞ்சீர்ச்
சான்றோர்சமழ்த்தனர்நிற்பவேமற்றவரை

யீன்றாட்கிறப்பப்பரிந்து.

* ௬ *

பெறுவதுகொள்பவர்தோள்போனெறிபட்டுக்

கற்பவர்க்கெல்லாமெளியநூன்மற்றம்

முறிபுரைமேனியருள்ளம்போன்றியார்க்கு
மறிதற்கரியபொருள்.

* ௭ *

புத்தகமேசாலத்தொகுத்தும்பொருடெரியா
ரூய்த்தகமெல்லாநிறைப்பினுமற்றவறைப்
போறறும்புலவரும்வேறேபொருடெரிந்து
தேறறும்புலவரும்வேறு.

* அ *

பொழிப்பகலநட்பநூலெச்சமிந்தான்கிற்
கொழித்தகலங்காட்டாதார்சொற்கள்பழிப்பி
னினையாமாசேக்குதெடுங்குன்றதாட
வுனையாமோநூலிற்குதன்று.

* கூ *

இற்பிறப்பில்லாரெனைத்துநூல்கற்பினுஞ்
சொற்பிறழாக்காக்குங்கருவியபோவிற்பிறந்த
நல்லறிவாளர்தவின்றநூறேற்றுதார்
புல்லறிவுதாமறிவதில்.

* ஐ *

ஆ நாலடி.

புல்லறிவாண்மை.

அருளினறமுரைக்குமன்புடையார்வாய்ச்சொற்
பொருளாகக்கொள்வர்புலவர்பொருளல்லா
வேழையதனையிகழ்ந்துரைக்கும்பாற்கூழை
முழைசுவையுணராதாங்கு.

அவ்வியமில்லாறத்தாறுரைக்குங்காற்
செவ்வியரல்லார்செவிகொடுத்துங்கேட்கலார்
கவ்வித்தோறின்னுங்குணுங்கர்நாய்பாற்சோற்றின்
செவ்விகொளறேற்றாதாங்கு.

* உ *

இமைக்குமளவிற்றம்மின்னுயிர்போமார்க்க
மெனைத்தானுந்தாங்கண்டிரூந்துந்தினைத்துணையு
நன்றிபுரிகல்லாநாணின்மடமாக்கள்
பொன்றிலென்பொனறாக்காலென்.

* ௩ *

உளநாள்சிலவாலுயிர்க்கேமமின்றாற்
பலர்மன்னுந்தூற்றும்பழியாற்பலருள்ளுங்
கண்டாரோடெல்லாநகாஅதெவனொருவன்
றண்டித்தனிப்பகைகோள்.

* ௪ *

ஏய்தியிருந்தவவைமுன்னர்ச்சென்றெள்ளி
வைதானொருவனொருவனைவைய
வயப்பட்டான்வாளாவிருப்பானேல்வைதான்
வியத்தக்கான்வாழுமெனின்.

* ௫ *

மூப்புமேல்வாராமைமுன்னேயறவினையை
ஆய்கியதன்கண்முயலாதானாக்கிப்
புறத்திருபோகென்னுமின்னுச்சொல்லில்லுட்
டொழுத்தையாற்கூறப்படும். * கூ *

•

தாமேயுமின்புறூர்தக்கார்க்குநன்றூற்று
சேடஞ்சார்நன்னெறியுஞ்சேர்கலார்தாமயங்கி
யாக்கத்துட்டேங்கியவத்தமேவாழ்நாளைப்

•

போக்குவார்புல்லறிவினர். * எ *

சிறுகாலையேதமக்குச்செல்வழிவல்லி
யிறுகிறுகத்தோட்கோப்புக்கொள்ளாரிறுகிறுகிப்

பின்னறிவாமென்றிருக்கும்பேதையார்கைகாட்டும்
பொன்னுண்டுளிவிளங்காயாமம். * ஏ *

வெறுமையிடத்தும்விழுப்பிணிப்போழ்து
மறுமைமநத்தாரேயாகிமறுமையை

யைந்தையனைத்தானுமாற்றியகாலத்துச்
சிந்தியார்சிற்றறிவினார்.

* கூ *

ஏன்னேமற்றிவ்வுடம்புபெற்றுமறநினையார்
கொன்னேகழிப்பர்தம்வாழ்நாளையன்னோ
வளவிறந்தகாதற்றம்மாருயிரன்னார்க்
கொளவிழைக்குங்கூற்றமுங்கண்டு. * ௰ * ஆ௩௱௧௰.

பேதைமை. (சுஎ)

கொலைஞருலையேற்றித்தீமடுப்பவாமை
நிலையறியாதந்நீர்படிந்தாடியற்றே
கொலைவல்பெருங்கூற்றங்கோட்பார்ப்பவீண்டை
வலையகத்துச்செம்மாப்பார்மாண்பு.

* க *

பெருங்கடலாடியசென்றாரொருங்குட
னோசையவிந்தபின்னாடுதுமென்றற்றா
லீற்செய்குறைவினைநீக்கியறவினை
மற்றறிவாமென்றிருப்பார்மாண்பு.

* உ *

சூலந்தவங்கல்விகுடிமைமூப்பைந்தும்
விலங்காமலெய்தியக்கண்ணுநலஞ்சான்ற
மையறுதொல்சீருலகமறியாமை
நெய்யிலாப்பாற்சோற்றினேர்.

* ங *

கன்னனிநல்லகடையாயமாக்களிற்
சொன்னனிதாமுணராவாயினுமின்னினியே
நிற்றலிருத்தல்கிடத்தவியங்குதலென்
றுற்றவர்க்குத்தாமுதவலான். * ௪ *

பெறுவதொன்றின்றியும்பெற்றானேபோலக்
கறுவுகொண்டேலாதார்மாட்டுங்கறுவினாற்
கோத்தின்னாகூறியுரையாக்காற்பேதைக்கு
நாத்தின்னுநல்லசுனைத்து. * ௫ *

(௪௮) பேதைமை.

தங்கண்மரபில்லார்பின்சென்றுதாமவரை
யெங்கண்வணக்குதுமென்பவர்புன்கேண்மை
நற்றளிர்ப்புன்னைமலருங்கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக்கையிழந்தற்று.
* ௬ *

ஆகாதெனினுமகத்துநெய்புண்டாகிற்
போகாதெறும்புபுறஞ்சுற்றுமம்மா னுங்
கொடாஅனினுமுடையானைப்பற்றி
விடா அருளகத்தவர்.

* எ *

நல்லவைநாடொறுமெய்தாறஞ்செய்யா
ரில்லாதார்க்கியாதொன்றுமீகலாவொல்லா
மினியார்தோள்சாரிசைபடவாழ்வார்
மூனியார்கொழும்வாழ்நாள்.

* அ *

விழைந்தொருவர்தம்மைவியப்பவொருவர்
விழைந்திலேமென்றிருக்குங்கண்மைதழங்குகூற்
பாய்திரைசூழ்வையம்பயப்பினுமின்னுதே
யாய்நல்லமில்லாதார்மாட்டு.

* க *

கற்றனவுங்கண்ணகன்றசாயலுமிற்பிறப்பும்
பக்கத்தார்பாராட்டப்பாடெய்துந்தானுரைப்பின்
மைத்துனர்பல்கிமருந்திற்றணியாத
பித்தனென்றெள்ளப்படும். * ௰ * ௵ ௩௱௪௰.

கீழ்மை. (௬௧

கப்பிகடவதாக்காலைத்தன்வாய்ப்பெயினுங்
குப்பைகிளைப்போவாக்கோழிபோன்மிக்க
கநம்பொதிந்தநூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன்
மநம்புரிந்தவாறேமிகும். * ௧ *

காழாயகொண்டுகசடற்றார்தஞ்சாரற்
றாழாதுபோவாமெனவுரைப்பிற்கீழ்தா
னுறங்குவாமென்றெழுந்துபோமாமஃதன்றி
மறங்குமாமற்றொன்றுரைத்து.
* ௨ *

பெருநடைதாம்பெறினும்பெற்றிபிழையா
தொருநடையராகுவர்சான்றோர்பெருநடை
பெற்றக்கடைத்தும்பிறங்கருவிநன்னாட
வற்றாமொருநடைகீழ். * ௩ *

தினையனைத்தேயாயினுஞ்செய்தநன்றுண்டாற்
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்பனையனைத்
தென்றுஞ்செயினுமிலங்கருவிநன்னாட
நன்றிலநன்றறியார்மாட்டு.

* ௪ *

பொற்கலத்தூட்டிப்புறந்தரினுநாய்பிற
ரெச்சிற்கிமையாதுபார்த்திருக்குமச்சீர்
பெருமையுடைத்தாக்கொளினுங்கீழ்செய்யுங்
கருமங்கள்வேறுபடும். * ௫ *

சக்கரச்செல்வம்பெறினும்விழுமியோ
ரெக்காலுஞ்சொல்லார்மிகுதிச்சொலெக்காலு
முந்திரிமேற்காணிமிகுவதேற்கீழ்தன்னை

யிந்திரனாவெண்ணிவிடும்.

* ௬ *

மைதீர்பசும்பொன்மேன்மாண்டமணியழுத்திச்
செய்ததெனினுஞ்செருப்புத்தன்காற்கேயா
மெய்தியசெல்வத்தராயினாங்கீழ்களைச்

செய்தொழிலாற்காணப்படும்.

" ௭ "

கடுக்கெனச்சொல்வற்றாங்கண்ணோட்டமின்றா
மிடுக்கண்பிறர்மாட்டுவக்குமடுத்தடுத்து
வேகமுடைத்தாம்விறன்மலைநன்னாட
வேகுமாமெள்ளுமாங்கீழ்.

* ௮ *

பழையரிவரென்றுபன்னாட்பின்னிற்பி

னுழையினியராகுவர்சான்றோர்விழையாதே
கள்ளுயிர்க்குநெய்தற்கனைகடற்றிண்சேர்ப்ப
வெள்ளுவர்கீழாயவர்.

* ௯ *

கொய்புற்கொடுத்துக்குறைத்தென்றுந்தீறறினும்
வையம்பூண்கல்லாசிறுகுண்டையையகே
ளெய்தியசெல்வத்தராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற்காணப்படும். * ௰ * ௵ ௩௱௫௰.

கயமை. (௭௧)

ஆர்த்தவறிவினாண்டிளையராயினுங்
காத்தோம்பித்தம்மையடக்குபமூத்தொறூஉந்
தீத்தொழிலேகன்றித்திரிதந்தெருவைபோற்
போத்தறார்புல்லறிவினார். * ௧ *

செழும்பெரும்பொய்கையுள்வாழினுமென்றும்
வழும்பறுக்ககில்லாவாந்தேரைவழும்பில்சீர்
நூல்கற்றக்கண்ணுநுணுக்கமொன்றில்லாதார்
தேர்கிற்கும்பெற்றியரிது. * ௨ *

கணமலைநன்னாடகண்ணின்றொருவர்
குணனேயுங்கூறற்கரிதாற்குணனழுங்கக்
குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர்கட்
கெற்றாலியன்றதோநா. * ௩ *

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை
சேடியர்பொலச்செயறேற்றார்கூடிப்
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி
மதித்திறப்பர்மற்றையவர். * ௪ *

தளிர்மேலேநிற்பினுந்தட்டாமற்செல்லா
வுளிநீரார்மாதோகயவரளிநீரார்க்
கென்னானுஞ்செய்யாரெனைத்தானுஞ்செய்பவே
யின்னாங்குசெய்வார்ப்பெறின்.

* ௫ *

மலைநலமுள்ளுங்குறவன்பயந்த
வினைநிலமுள்ளுமுழவன்சிறந்தொருவர்
செய்தநன்றுள்ளுவர்சான்றோர்கயந்தன்னை
வைதலையுள்ளிவிடும்.

* கூ *

ஒருநன்றிசெய்தவர்க்கொன்றியெழுந்த
பிழைதூறுஞ்சான்றோர்பொறுப்பர்கயவர்க்
கெழுதூறுநன்றிசெய்தொன்றுதீதாயி
னெழுதூறுந்தீதாய்விடும்.

* எ *

எட்டைடப்பருவத்துமிற்பிறந்தார்செய்வன
மேட்டிடத்துழுஞ்செய்யார்முழுமகக்கள்கோட்டை
வயிரஞ்செறிப்பினும்வாட்கண்ணுய்படன்றி
செயிர்வேழமாகுதலின்று.

* அ *

இன்றுதுமிந்நிலையேயாதுமினிச்சிறிது
நின்றுதுமென்றுநினைத்திருந்தொன்றி
யுளையின்டிகிழ்ந்ததம்முள்ளம்வேறுகி
மனையிலையின்மாய்ந்தார்பலர்.

* கூ *

நீருட்பிறந்துநிறம்பசியதாயினு
மீரங்கிடையகத்தில்லாகுமோரு
நிறைப்பெருஞ்செல்வத்துநின்றக்கடைத்து
மறைப்பெருங்கலன்றாருடைத்து. * ௰ * ௵ ௩௱௬௰.

பன்னெறி. (௭௩

மழைதிளைக்குமாடமாய்மாண்பமைந்தகாப்பா
யிழைவிளக்குநின்றிமைப்பினென்றாம்விழைதக்க
மாண்டமனையாளையில்லாதானில்லகங்
காண்டற்கரியதோர்காடு. * ௧ *

வழுக்கெனைத்துமில்லாதவாள்வாய்க்கிடந்து
மிழுக்கினைத்தாம்பெறாராயினிழுக்கெனைத்துஞ்
செய்குறாப்பாணிசிறிதேயச்சின்மொழியார்
கையுறாப்பாணிபெரிது.

* ௨ *

ன்றியென்றெதிர்நிற்பாள்கூற்றஞ்சிறுகாலை
யட்டிவ்புகாதாளரும்பிணியட்டதனை
யுண்டியுதவாதாளில்வாழ்பேயிம்மூவர்
கொண்டானைக்கொல்லும்படை. * ரு *

கடியெனக்கேட்டுங்கடியான்வெடிபட
வார்ப்பதுகேட்டுமதுதெளிறான்பேர்த்துமோ
நிற்கொண்டினிதிருஉமேமுறுதலென்பவே
கற்கொண்டெறியுந்தவறு. * கூ *

தலேயதவழுபன்றுவாழ்தலொருவர்க்
கிடையேயினியார்கட்டங்கல்கடையே
புணாதென்றெண்ணிப்பொருணைசயாதம்மம்
புணர்வார்பின்சென்றுநிலை. * ரு *

கல்லாக்கழிப்பர்தலையாயார்நல்லவை
சொல்லாக்கழிப்பரிடைகள்கடைக
ணினிதண்ணேமாப்பெறேம்யாமென்னு
மூனிலிறற்கண்பாடிலர்.

* ஈ *

செந்நெல்லாலாயசெழுஞ்சோமற்றுமச்
செந்நெல்லேயாகிவிளைதலாலந்நெல்

வயனிறையக்காய்க்கும்வளவயலூர
மகனறிவுதந்தையறிவு.

* ஏ *

உடைப்பெருஞ்செல்வருஞ்சான்றோருங்கேட்டுப்
புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்பெருகிக்
கடைக்காறலக்கண்ணதாகிக்குடைக்கால்போற்
கீழ்மெலாய்நிற்குமுலகு.

* அ *

இனியார்தந்நெஞ்சத்துநோயுரைப்பவந்நோய்
தணியாதவுள்ளமுடையார்மணிவரன்றி
வீழுமருவிவிறன்மலைநன்னாடா
வாழ்வின்வரைபாய்தனன்று. * ௯ *

புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும்
விதுப்பறநாடின்வேறல்லப்புதுப்புனலு
மாரியறவேயறுமேயவரன்பும்
வாரியறவேயறும். * ௰ * ௵ ௧௱௭௰.

பொதுமகளிர். ௭௰

விளக்கொளியும்வேசையர்நட்புமிரண்டுந்
துளக்கறநாடின்வேறல்லவிளக்கொளியு
நெய்யற்றகண்ணேயறுமேயவரன்புங்
கையற்றகண்ணேயறும்.

* ௧ *

அங்கோட்டகலல்குலாயிழையாணம்மொடு
செங்கோடுபாய்துமேயென்றாண்மற்செங்கோட்டின்
மேற்காணமின்மையான்மேவாதொழிந்தாளே
காற்கானோய்காட்டிக்கலுழ்ந்து.

* உ *

அங்கண்விசும்பினமார்தொழப்படுஞ்
செங்கண்மாலாயினுமாகமற்றங்கைக்
கொடுப்பதொன்றில்லாரைக்கொய்தளிரன்னார்
விடுப்பர்தங்கையாற்றொழுது.

* ௩ *

ஆணமினெஞ்சத்தணிநீலக்கண்ணார்க்குக்
காணமில்லாதார்கடுவனையர்காணவே
செக்கூர்ந்துகொண்டானுஞ்செய்தபொருளுடையா
ரக்காரமன்னாவர்க்கு.

* ௪ *

பாம்பிற்கொருதலைகாட்டியொருதலை
தேம்படுதெண்கயத்துமீன்காட்டுமாங்கு
மலங்கன்னசெய்கைமகளிர்தோள்சேர்வார்
விலங்கன்னவெள்ளறிவினார்.

* ௫ *

பொத்தநூற்கல்லும்புணர்பிரியாவன்றிலும்போ
னித்தலுநம்மைமேப்பிரியலமென்றுரைத்த
பொற்றொடியும்போர்த்தகர்க்கோடாயிணைன்னெஞ்சே
நிற்றியோபோதியோதீ.

* கூ *

ஆமாபோனக்கியவர்கைப்பொருள்கொண்டு
சேமாபோற்குப்புறாஉஞ்சில்லக்கணன்பினை
யேமாந்தெமதென்றிருந்தார்பெறுபவே
தாமாம்பலரானைகை.

* எ *

ஏமாந்தபோழ்தினினியார்போன்றின்றாய்த்
தாமார்ந்தபோதேதகர்க்கோடாமாலைக்கிற்
றந்நெறிப்பெண்டிர்தடமுலிசாரோ
செந்நெறிச்சேர்துமென்பார்.

* அ *

ஊறுசெய்நெஞ்சந்தம்முள்ளடக்கியொண்ணுதலார்
தேறமொழிந்தமொழிகேட்டுத்தேறி
யெமரென்றுகொள்வாரூங்கொள்பவேயார்க்குந்
தமரல்லர்தம்முடம்பினார்.

* ௯ *

உள்ளமொருவனுழையதாவொண்ணுதலார்
கள்ளத்தாற்செய்யுங்கருத்தெல்லாந்தெள்ளி
யறிந்தவிடத்துமறியாராம்பாவஞ்
செறிந்தவுடம்பினவர். * ௰ * ௸ ௩௱ அ௰.

கற்புடைமகளிர். (௭௭

அரும்பெற்றகற்பினயிராணியன்ன
பெரும்பெயர்ப்பெண்டிரெனினும்விரும்பிப
பெறுநசையாற்பின்னிற்பாரின்மையேபேணு
நறுநுதலாணன்மைத்துணை.

* ௧ *

குடநீர்ட்டுண்ணுமிடுக்கட்பொழுதுங்
கடனீர்றவுண்ணுங்கேளிர்வரினுங்
கடனீர்மைகையாறாக்கொள்ளுமடமொழி
மாதர்மனைமாட்சியாள். * உ *

நாலாறுமாறாய்நனிசிறிதாயெப்புறனு
மேலாறுமேலுறைசோரினுமேலாய
வல்லாளாய்வாழுமூர்தற்புகழுமாண்கற்பி
னில்லாளமர்ந்ததேயில்.
* ௩ *

கட்கினியாள்காதலன்காதல்வகைபுனைவா
ளுட்குடையாளூர்நாணியல்பினாளூட்கி
யிடனறிந்தூடியினிதினுணரு
மடமொழிமாதராள்பெண்.

* ௪ *

ன்ஞ்ஞான்றுமெங்கணவரெந்தோண்மேற்சேர்ந்தெழினு
மஞ்ஞான்றுகண்டேம்போனாணுதுமாலெஞ்ஞான்று
மென்னைகெழீஇயினர்கொல்லோபொருணசையாற்
பன்மார்புசேர்ந்தொழுகுவார். * ௫ *

உள்ளத்துணர்வுடையாலேதியநூலற்ருல்
வள்ளன்மைபூண்டான்கணவெண்பொருடெள்ளிய
வாண்மகன்கையிலயில்வாளனேத்தோ
தாணுடையாள்பெற்றநலம். * க *

ருங்கொள்ளுஞ்செங்கொள்ளுந்துணிப்பதக்கென்
ருருங்கொப்பக்கொண்டானுமோவெருங்கொவ்வா
தன்னுதலார்த்தோய்ந்தவணைமார்பனீராடா
தென்னையுந்தோயவருஞ்.

* ள * கொடியவைகூறுதிபாணநீகூறி
னடையபயவிட்டொதுங்கிச்சென்றுதுடி
னிடக்கண்ணனேயம்யாமூற்கதணுல்
வலக்கண்ணனேயார்க்குனோ.

* அ *

சாய்ப்பறிக்கநீர்திகழுந்தண்வயலூரன்மீ
தீப்பறக்கநொந்தேனும்யானேமற்றீப்பறக்கத்
தாக்கிமுலைபொருததண்சாந்தணியகல
நோக்கியிருந்தேனும்யான். * ௯ *

அரும்பவிழ்தாரினானெம்மருளுமென்று
பெரும்பொய்யுரையாதிபாணகரும்பின்
கடைக்கண்ணனையநாமூற்கதனா
விடைக்கண்ணனையார்க்குரை. * ௰ * ௮௳.௩௱௯௰.

பொருட்பான்முற்றிற்று.

காமநுதலியல். (௭௯)

முயங்காக்காற்பாயும்பசலைமற்றூடி
யயங்காக்காலுப்பின்றாங்காமம்வயங்கோத
நில்லாத்திரையலைக்குநீள்கழித்தண்சேர்ப்ப
புல்லாப்புலப்பதோராறு. * ௧ *

தம்மமர்காதலர்தார்சூழணியகலம்
விம்மமுயங்குந்துணையில்லார்க்கிம்மெனப்
பெய்யவெழிலிமுழங்குந்திசையெல்லா
நெய்தலறைந்தன்னநீர்த்து. * ௨ *

கம்மஞ்செய்மாக்கள்கருவியொடுக்கிய
மம்மர்கொண்மாலைமலராய்ந்துபூத்தொடுப்பாள்
கைம்மாலையிட்டுக்கலுழ்ந்தாடுணையில்லார்க்
கிம்மாலையென்செய்வதென்று. * ௩ *

செல்சுடர்நோக்கிச்சிதரரிக்கண்கொண்டநீர்
மெல்விரலூழ்தெறியாவிம்மிந்தன்மெல்விரலி
னாள்வைத்துநங்குற்றமெண்ணுங்கொலந்தோதன்
றோள்வைத்தணைமேற்கிடந்து. * ௪ *

கண்கயலென் ஐங்கருத்தினாற்காதலி
பின்சென்றதம்மசிறுசிரல்பின்சென்று
மூக்கியெழுந்துமெறிகல்லாவொண்புருவங்
கோட்டியவில்வாக்கறிந்து. * ௫ *

(௨௰) காமறுதலியல்.

அாக்காம்பனாறும்வாயம்மருங்கிற்கன்னோ
பரற்கானமாற்றினகொல்லோவரக்கார்ந்த
பஞ்சிகொண்டூட்டினும்பையெனப்பையெனவென்
றஞ்சிப்பின்வாங்குமடி. *

ஓலைக்கணக்கரொலியடங்குபுன்செக்கர்
மாலைப்பொழுதின்மணந்தார்பிரிவுள்ளி
மாலைபரிந்திட்டழுதாள்வனமுலைமேற்
கோலஞ்செய்சாந்தந்திமிர்ந்து.

கடக்கருங்கானத்துக்காளைபின்னாளை
நடக்கவும்வல்லையோவென்றிசுடர்த்தொடீஇ
பெற்றானொருவன்பெருங்குதிரையந்நிலையே
கற்றானஃதூருமாறு.

முலைக்கண்ணுமுத்துமுழுமெய்யும்புல்லு
மிலக்கணம்யாதுமறியேன்கலைக்கணம்
வேங்கைவெரூஉநெறிசெலியபோலுமென்
பூம்பரவைசெய்தகுறி.

கண்மூன்றுடையானுங்காக்கையும்பையரவு
மென்னீன்றயாயும்பிழைத்ததென்பொன்னீன்ற
கோங்கரும்பன்னமுலையாய்பொருள்வயிற்
பாங்கனார்சென்றநெறி. * ௰ *

காமத்துப்பான்முற்றிற்று.

நாலடிநானூறுமுற்றிற்றுமுற்றும்.